| Judicial Form No.53<br>(Sec.Rule 42)<br>DEPOSITION OF WITNESS<br>(Chapter XXIII Code of Criminal Procedure<br>**In the Court of the Judicial Magistrate No.II, Poonamallee** | | |
|---|---|---|
| சி.சி.எண்.434/2023 | | |
| Deposition of witness for | Prosecution | அ.சா.2 |
| | Defence | |
| | Court | |

| | | |
|---|---|---|
| Name | : | அப்துல் ரகுமான் |
| S/O | : | முகமத் ஷவருல்லா |
| Village | : | குமணஞ்சாவடி கதவு எண்.47, எல்லையம்மன் தெரு, சென்னை |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | 52 |

| | |
|---|---|
| Solemnly aaffirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (CentralAct 44 of 1969) on the day of | **23.05.2024** |

**முதல் விசாரணை**

1. 2022 ல் 6 வது மாதம் பகல் 12.00 மணியளவில் எஸ்ஏ கல்லூரி ஆவடி ரோட்டில் உள்ள எதிரில் டீ சாப்பிட போனேன்

2. ஒரு கார் பூந்தமல்லி சைடிலிருந்து வேகமாக வந்தது

3. இருசக்கர வாகனம் எந்த பக்கம் இருந்து வந்தது என்று தெரியவில்லை ஒரு நபர் அடிப்பட்டு கீழே விழுந்து கிடந்தார்

4. எல்லோரும் பார்க்க போனார்கள் நானும் அவர்களோடு பார்க்க போனேன்

5. Ambulance க்கு போன் செய்தார்கள் பிறகு நான் வந்துவிட்டேன்

6. அவருக்கு என்ன காயம் ஏற்பட்டது என்று நான் பார்க்கவில்லை

7. போலீசார் என்னை விசாரித்தார்கள்

**குறுக்கு விசாரணை இல்லை**

| Judicial Form No.53<br>(Sec.Rule 42)<br>DEPOSITION OF WITNESS<br>(Chapter XXIII Code of Criminal Procedure<br>**In the Court of the Judicial Magistrate No.II, Poonamallee** | | |
|---|---|---|
| சி.சி.எண்.434/2023 | | |
| Deposition of witness for | Prosecution | அ.சா.3 |
| | Defence | |
| | Court | |

| | | |
|---|---|---|
| Name | : | தங்கவேலு |
| S/O | : | சிதம்பரம் |
| Village | : | மங்குன் கிராமம், பெரம்பலூர் மாவட்டம் |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | 46 |

| | |
|---|---|
| Solemnly aaffirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (CentralAct 44 of 1969) on the day of | **23.05.2024** |

**முதல் விசாரணை**

1.இந்த வழக்கை பற்றி எனக்கு எதுவும் தெரியாது

2. போலீசார் வந்து விசாரித்தார்கள்

3. எனக்கு தெரியாது என்று சொல்லிவிட்டேன்

4. என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 1வது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். இந்த கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.3

5. (அரசுத்தரப்பில், இந்த சாட்சியை பிறழ்சாட்சியாக பாவித்து, அரசுத்தரப்பு வழக்கறிஞர், சாட்சியை குறுக்கு விசாரணை செய்திட அனுமதி கோரினார். அரசுத்தரப்பு சாட்சியாக அழைக்கப்பட்டு, அரசுத்தரப்பு வழக்கிற்கு எதிராக இவர் சாட்சியமளித்துள்ளதால், அரசுத்தரப்பு வழக்கறிஞர் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.)

**அரசுத்தரப்பு குறுக்கு விசாரணை.**

1. இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி, இவ்வழக்கு குற்ற சம்பவம் தொடர்பாக, சம்பவயிடத்தை என் முன்னிலையில், பார்வையிட்டு, மாதிரி வரைபடம் வரைந்து, பார்வை மகஜர் தயார் செய்தார்கள் என்றால் சரியல்ல. அப்போது நான் அதற்கு சாட்சியாக இருந்து, பார்வை மகஜரில் அந்த இடத்தில் வைத்து சாட்சி கையொப்பம் செய்தேன் என்றால் சரியல்ல. போலிசார் என்னை விசாரித்தபோது வாக்குமூலத்திலும் இந்த சங்கதிகளை சொன்னேன் என்றால் சரியல்ல, தற்போது, எதிரியை குற்ற வழக்கிலிருந்து காப்பாற்றுவதற்காக, இந்த சங்கதிகளை தெரியாது என நீதிமன்றத்தில் பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

| Judicial Form No.53<br>(Sec.Rule 42)<br>DEPOSITION OF WITNESS<br>(Chapter XXIII Code of Criminal Procedure<br>**In the Court of the Judicial Magistrate No.II, Poonamallee** | | |
|---|---|---|
| சி.சி.எண்.434/2023 | | |
| Deposition of witness for | Prosecution | அ.சா.4 |
| | Defence | |
| | Court | |

| | | |
|---|---|---|
| Name | : | ரமேஷ் குமார் |
| S/O | : | காவல் உதவி ஆய்வாளர், பூந்தமல்லி போக்குவரத்து புலனாய்வு பிரிவு |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | 60 |

| | |
|---|---|
| Solemnly aaffirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (CentralAct 44 of 1969) on the day of | **23.05.2024** |

**முதல் விசாரணை**

1. நான் பூந்தமல்லி போக்குவரத்து புலனாய்வு பிரிவில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிகிறேன்

2. 19.06.2022 தேதியன்று விஜய் என்பவர் கொடுத்த எழுத்துமூலமான புகாரினை பெற்று, நிலைய குற்ற எண். 463/2022 சட்ட பிரிவுகள் 279, 338 இ.த.ச –ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, இவ்வழக்கினை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன். முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3

3. சம்பவயிடத்திற்கு சென்று சாட்சிகள் தங்கவேலு, சேது பாண்டியன் முன்னிலையில், சம்பவயிடத்தை பார்வையிட்டு, மாதிரி வரைபடம் வரைந்து, பார்வை மகஜர் தயார் செய்தேன். இந்த மாதிரி வரைபடம் **அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பார்வை மகஜர் **அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

4. பின்பு சாட்சிகள் விஜய், அப்துல் ரகுமான், தங்கவேலு, சேது பாண்டியன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலங்களை பதிவு செய்தேன் பின்பு மருத்துவர் சரண் குமார் என்பவரை சந்தித்து பவித்ரன் விபத்து பதிவேடு பெற்று அவரது வாக்குமூலத்தை பதிவு செய்தேன் சம்பவத்தில் காயமுற்ற பவித்ரன் என்பவர் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டதாக 23.06.2022 தேதியன்று இறப்பு அறிக்கை கிடைக்கப்பெற்றதால் இவ்வழக்கினை காவல் ஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன். இறப்பு அறிக்கை அ.சா.ஆ.6

5. காவல் ஆய்வாளர் சுபாஷினி இவ்வழக்கினை மேல் புலன் விசாரணைக்கு எடுத்து கொண்டு இவ்வழக்கின் சட்டபிரிவினை இ.த.ச பிரிவுகள் 279, 304(ஏ) இ.த.ச–ன் கீழ் மாறுதல் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.7

6. பின்பு பவித்ரன் பிரேதத்தின் மீது கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவ மனை சவங்கிடங்கில் வைத்து பிரேத விசாரணை மேற்கொண்டு பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்துள்ளார் பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ.8

7. பின்பு பிரேதத்தை பிரேத பரிசோதனைக்கு உட்படுத்தி தலைமை காவலர் கோபிநாத் மூலம் உறவினர்கள் வசம் ஒப்படைத்துள்ளார். விபத்து வாகனங்களை மோட்டார் வாகன ஆய்வாளருக்கு அனுப்பிவைத்துள்ளார்

8. எதிரியை 25.06.2022 தேதியன்று கைது செய்து நிலைய பிணையில் விடுவித்துள்ளார்

9. சாட்சிகள் விஜய், அப்துல் ரகுமான், மனோகரன் ஆகியோர்களை விசாரித்து மறு வாக்கமூலம் பதிவு செய்துள்ளார்

10. பின்பு பிரேத பரிசோதனை மேற்கொண்ட மருத்துவர் மணிகண்ட ராஜ் என்பவரை

சந்தித்து பிரேத பரிசோதனை அறிக்கை பெற்று அவரது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார் பிரேத பரிசோதனை அறிக்கை அ.சா.ஆ.9

11. மருத்துவர் தீபக்–ஐ விசாரித்து வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்

12. மோட்டார் வாகன ஆய்வாளர் காவேரி என்பவரை சந்தித்து மோட்டார் வாகன ஆய்வறிக்கைகள் பெற்று அவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். மோட்டார் வாகன ஆய்வறிக்கைகள் அ.சா.ஆ.10 (2 எண்ணிக்கை)

13. தலைமை காவலர் கோபிநாத் என்பவரை விசாரித்து வாக்குமூலத்தை பதிவுசெய்துள்ளார் இத்துடன் அவரது புலன் விசாரணை முடித்து எதிரி மீது இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்

**குறுக்கு விசாரணை**

1. 1. நான் சம்பவயிடத்திற்கே போகவில்லை, சம்பவயிடத்தில் சாட்சிகள் யாரையும் விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல.

2. இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்தும், காவல் நிலையத்திலேயே வைத்து, தயார் செய்துக்கொண்டேன் என்றால் சரியல்ல.

3. எதிரி வழக்கு குற்றத்தை செய்யவில்லை என்றால் சரியல்ல.

4. எதிரிக்கும், இந்த வழக்கு குற்ற சம்பவத்திற்கும் எந்தவொரு சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

5. உண்மையில், இவ்வழக்கில் சாட்சிகள் யாரையும் விசாரிக்கவில்லை, விசாரித்ததுபோல, சாட்சிகளின் வாக்குமூலங்கள் தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

6. இறுதி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது போல, உண்மையில் எந்த ஒரு சம்பவமும் நடக்கவில்லை என்றால் சரியல்ல.

7. சொல்லப்படும் தேதியிலும், இடத்திலும் எதிரியை கைது செய்யவில்லை என்றால் சரியல்ல.

8. புகார்தாரருக்கு உதவி செய்ய வேண்டும் என்பதற்காக, அவர் கொடுத்த தவறான புகாருக்கு ஏற்றவாறு, வழக்கு ஆவணங்களை ஜோடித்து, எதிரி மீது தவறான இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

9. இவ்வழக்கினை சரியாக புலன் விசாரணை செய்யவில்லை என்றால் சரியல்ல.

10. இவ்வழக்கினை சரியாக புலன் விசாரணை செய்யாமல் எதிரிமீது தவறான இறுதி அறிக்கையை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

11. தவறாக தாக்கல் செய்த வழக்கிற்கு ஏற்றவாறு, பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன்

என்றால் சரியல்ல.

12. முதல் தகவல் அறிக்கை நான் தான் பதிவு செய்தேன் இறந்து போன நபர் ஓட்டி சென்ற வாகனத்தின் பதிவு எண் TN 12 Y 4497 உள்ளது என்றால் சரிதான் இறுதி அறிக்கையில் வாகனத்தின் பதிவு எண் TN 12 Y 4495 உள்ளது என்றால் சரிதான் இதில் எது சரியான எண் என்றால் இறுதி அறிக்கையில் உள்ள பதிவு எண் தான் சரியானது முதலில் புகார்தாரர் தவறாக பதிவு எண்ணை கொடுத்துள்ளார் நான் போய் சம்பவயிடத்தில் இருசக்கர வாகனத்தை பார்க்கவில்லை

13. இவ்வழக்கில் பதிவு செய்யப்பட்ட பிரேத விசாரணை அறிக்கையில் பத்தி எண்.9, 15 லும் இருசக்கர வாகனம் ஆவடியிலிருந்து பூந்தமல்லி நோக்கி சென்றபோது அதே சாலையில் அதே திசையில் அவருக்கு வலது பக்கமாக வந்து விபத்து ஏற்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்

14. இறந்து போனவருக்கு நஷ்ட ஈடு கிடைக்க வேண்டும் என்பதற்காக எதிரி மீது இந்த வழக்கு தொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல